தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 18.11.2026

## காணொளி காட்சி விசாரணை

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA14962/A/2024**

திரு. I.K.ராமலிங்கம் .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 455. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 18.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. I.K.ராமலிங்கம் அவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேசிய தகவல் மையத்தின் (NIC) காணொளி காட்சி அரங்கிலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ப. மணிகண்ட சபரி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தாரமங்கலம் கிராமத்தில் சர்வே எண் 159/2,159/5, 159/6,159/7, 161/2 இந்த சர்வே எண்கள் உள்ள நிலங்கள் அரசு ஆவணமான (ஆ) பதிவேட்டின் படி வருவாய் துறைக்கு சொந்தமான நிலமா அல்லது தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான நிலமா என்ற தகவல் வழங்க வேண்டுகிறேன். இந்த சர்வே எண்களின் FMB மற்றும் (ஆ) பதிவேட்டின் நகல்,

மேற்படி சர்வே எண்கள் ஒவ்வொன்றும் எத்தனை ஏக்கர்கள் உள்ளது. நஞ்சையா அல்லது புஞ்சையா, மேற்படி சர்வே எண்களின் எந்த சர்வே எண்களில் மயானம் என உள்ளது, என்பது போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 10.09.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 18.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.. அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 18.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 14.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு உரிய காலமான 30 நாட்களுக்குள் தகவல் வழங்கவில்லை எனவும், ஆணையத்தின் அழைப்பாணைக்குப் பிறகே தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 2 ஆண்டுகளுக்கு பிறகு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும், இனிவருங்காலங்களில் உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்க பொது அதிகார அமைப்பிற்கு அறிவுறுத்துமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு ஆணையத்தின் அழைப்பாணைக்குப் பிறகே தற்போதைய பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

"இனிவருங்காலங்களில் பொதுத் தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)இன் கீழ் பெறப்படும் மனுக்களுக்கு உரிய காலமான 30 நாட்களுக்குள் வழங்க இவ்வாணயம் அறிவுறுத்துகின்றது."

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண் SA- 14962/A/2024**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 455.

**மனுதாரர்:**

திரு. I.K.ராமலிங்கம்,
1–1/20C, ஓமலூர் ரோடு,
வார்டு 8, காமராஜ் நகர்,
தாரமங்கலம் அஞ்சல்,
சேலம் மாவட்டம் – 636 106.

Copy to File
Je/PA 19.11.2026

DESPATCHED

